

திருப்பத்தூர் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற புதிய விரிவான மினி பஸ் திட்டத்தை பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மினி பஸ் சேவையை கொடி அசைத்து துவக்கிவைத்தார். நிகழ்ச்சியில் திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார், திருப்பத்தூர் நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன் , மாவட்ட கழக துணை செயலாளர் டி.கே.மோகன் மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் , கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் மத்திய ஒன்றிய தி.மு.க. மாவட்டப் பிரதிநிதி வீடூர் பிரகாஷின் தாயார் மறைந்த உண்ணாமலை அம்மாள் திருவுருவப் படத்தை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய செயலாளர்கள் மணிமாறன், செழியன், பொதுக்குழு உறுப்பினர் வீடூர் ரவி, ஊராட்சி மன்றத் தலைவர் ஜெகதீஸ்வரி பிரகாஷ் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### தாமிரபரணி ஆற்றுப் பாலத்திலிருந்து கீழே விழுந்து உயிரிழந்த

# காவலர் சங்கர் குமார் குடும்பத்தினருக்கு ரூ.30 லட்சம் நிவாரண உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு !

**சென்னை, ஜூன் 20 - தூத்துக்குடி மாவட்டம், முறப்பநாடு, தாமிரபரணி ஆற்றுப் பாலத்திலிருந்து கீழே விழுந்து உயிரிழந்த காவலர் சங்கர் குமார் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்,**

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

தூத்துக்குடி மாவட்டம், முறப்பநாடு காவல் நிலையத்தில் காவலராகப் பணிப்புரிந்துவந்த சங்கர் குமார் (வயது 31) என்பவர் நேற்று (18.06.2025) இரவு சுமார் 8.30 மணியளவில் முறப்பநாடு அருகில் தாமிரபரணி ஆற்றுப்பாலத்தில் ஏற்பட்ட விபத்து ஒன்றின் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது எதிர்பாராத விதமாக ஆற்றுப் பாலத்தில் உள்ள தடுப்புச் சுவரில் கை வைத்தபோது நிலை தடுமாறி பாலத்திலிருந்து கீழே விழுந்ததில் காயம் ஏற்பட்டு உடனடியாக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையுமடைந்தேன்.

காவலர் சங்கர் குமார் அவர்களின் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

சங்கர் குமார் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு முப்பது இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### காரைக்குடியில்

# சிவகங்கை மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, ஜூன் 20 - காரைக்குடியில் சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று (20.06.2025 ) நடைபெறுகிறது.

இது குறித்து சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது. இன்று 20ம்தேதி சிவகங்கை மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் காரைக்குடியில் உள்ள தலைவர் கலைஞர் பவள விழா மாளிகையில் பசும் பொன் தா.கிருட்டிணன் அரங்கத்தில் காலை 10=00மணிக்கு நடைபெற உள்ளது.



மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர். அ. கணேசன் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கீழ்க் கண்ட பொருட்கள் குறித்து விவாதிக்கப்படுகிறது. 1.ஜூன் ஒன்றாம் தேதி கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் மதுரையில் நடைபெற்ற பொதுக்குழுவில் புதிதாக உறுப்பினர் சேர்ப்பது குறித்து அறிவித்தபடி புதிய உறுப்பினர் சேர்த்தலுக்கான விண்ணப்ப படிவங்கள் வழங்கப்படு கிறது. 2.கழக வளர்ச்சிப் பணிகள்.

எனவே இன்று நடைபெறும் செயற்குழு கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாநில சார்புஅணி நிர்வாகிகள், செயற்குழு ,பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய , நகர, பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள் தவறாதுகலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இத்தகவலை மாவட்ட கழகச் செயலாளரும் அமைச்சருமான கே.ஆர். பெரிய கருப்பன் தெரிவித்துள்ளார்.

# ‘அரசு ஆர்ட்ஸ்’ சுந்தரேசன் 7 ஆம் ஆண்டு நினைவு நாள்!

சென்னை, ஜூன் 20 - ‘அரசு ஆர்ட்ஸ்’சுந்தரேசன் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று (19.06.2025 - வியாழக்கிழமை) கடைப் பிடிக்கப்பட்டது.



முரசொலி பொங்கல் மலர் மற்றும் தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் மலர்களை தன் கை வண்ணத்தால் அழகுற வடிவமைத்தவரும் தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் மற்றும் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அன்பை பெற்றவருமான ‘அரசு ஆர்ட்ஸ்’ நிர்வாக இயக்குநர் ‘அரசு ஆர்ட்ஸ்’ சுந்தரேசன் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று (19.06.2025 வியாழக் கிழமை) கடைப்பிடிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சி ‘அரசு ஆர்ட்ஸ்’எண்.78, சீனிவாச பெருமாள் சன்னதி முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை 14, (புதுக்கல்லூரி பின்புறம்) எனும் முகவரியில் நடைபெற்றது.

### மயிலம் மத்திய ஒன்றியம்

# வீடூர் பிரகாஷின் தாயார் உண்ணாமலை அம்மாள் திருவுருவப்படம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

மைலம், ஜூன் 20 - மயிலம் மத்திய ஒன்றிய திமுக மாவட்ட பிரதிநிதி வீடூர் பிரகாஷின் தாயார் மறைந்த உண்ணாமலை அம்மாள் திருவுருவப் படத்தை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்து முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு 1000நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்..

இதை அடுத்து அவரது திருஉருவப்பட திறப்பு விழா நிகழ்ச்சி மற்றும்முத் தமிழ் அறிஞர் கலைஞரின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி வீடூர்ஊராட்சியில் நடைபெற்றது.

மயிலம் மத்திய ஒன்றிய தி.மு.க. மாவட்ட பிரதிநிதி வீடூர்பிரகாஷ், வீடூர் ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ்வரி பிரகாஷ் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு கழக இரு வண்ணக் கொடியினை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து உடல் நலக் குறைவால் காலமான உண்ணாமலை அம்மாள் அவர்களின்திருஉருவப்படத்தை திறந்து வைத்த விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



தென்காசி வடக்கு மாவட்டம் மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க.சார்பில் முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க “ஓரணியில் தமிழ்நாடு” எனும் மகத்தான திட்டத்தின் கீழ் புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் குருக்கள்பட்டி அபிஷேக் மஹாலில் ஒன்றிய செயலாளர் பெரியதுரை தலைமையில் தொகுதி பார்வையாளர் ராமஜெயம் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ பங்கேற்று கருத்துரை வழங்கினார். நிகழ்வில் முத்துச்செல்வி, இல.சரவணன் பரமையா, சின்னக்குருசாமி, மணிமேகலை, முத்துப்பாண்டியன், செந்தூர் பாண்டியன், தங்கதுரை, மரியலூயிஸ், பாண்டியன் ராஜ் என்ற கருப்பசாமி, மகாராஜன், செந்தில்குமார், செல்வி சுகுமாரன், திருமலைக்குமார், பூலியூர் கணேசன், முருகன், முத்துப்பாண்டி, தனசேகரன் மற்றும் கார்த்திக், ராஜதுரை பழனிவேல் முருகன், மனோஜ்குமார், தாமஸ் சண்முகராஜ், கோட்டைபாண்டி பிரதீப்குமார், ரமேஷ், சிவா, ஜெயக்குமார் குட்டிராஜ், சுகுமாரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### புதுக்கோட்டை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் த.மணிராஜன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய–நகர–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 21.06.2025 | திருமயம் தெற்கு ஒன்றியம் | துளையானூர், சமத்துவபுரம் | ஆரணி க.மாலா சொ.தமிழினியன் |
| 2 | | திருமயம் வடக்கு ஒன்றியம் | இராங்கியம் | க.ஆரணி க.மாலா சொ.தமிழினியன் |
| 3 | | அறந்தாங்கி மேற்கு ஒன்றியம் | தாந்தானி | பாலக்கரை த.கோவிந்தன் இரா.ப்ரீத்தி |
| 4 | | அறந்தாங்கி கிழக்கு ஒன்றியம் | சின்னக்கடைத் தெரு, விஜயபுரம். | பாலக்கரை த.கோவிந்தன் இரா.ப்ரீத்தி |
| 5 | | ஆவுடையார்கோவில் தெற்கு ஒன்றியம் | கரூர் | ஆலங்குடி இரா.செல்வராஜ் சு.சுகநிலவன் |
| 6 | | ஆவுடையார்கோவில் வடக்கு ஒன்றியம் | மீமிசல் | ஆலங்குடி இரா.செல்வராஜ் சு.சுகநிலவன் |
| 7 | 22.06.2025 | அரிமளம் வடக்கு ஒன்றியம் | கடியாப்பட்டி | எழும்பூர் தமிழினியன் |
| 8 | | அரிமளம் தெற்கு ஒன்றியம் | புதுப்பட்டி | எழும்பூர் தமிழினியன் |
| 9 | | திருவரங்குளம் மேற்கு ஒன்றியம் | வம்பன் நால் ரோடு | ஆரணி க.மாலா சு.சுகநிலவன் |
| 10 | | ஆலங்குடி பேரூர் | காமராஜர் சிலை | ஆரணி க.மாலா சு.சுகநிலவன் |
| 11 | | மணமேல்குடி வடக்கு ஒன்றியம் | கிருஷ்ணாஜிபட்டினம் | ஆலங்குடி இரா.செல்வராஜ் இரா.ப்ரீத்தி |
| 12 | 27.06.2025 | பொன்னமராவதி தெற்கு ஒன்றியம் | கொப்பனாப்பட்டி | தூத்துக்குடி க.சரத்பாலா சொ.தமிழினியன் |
| 13 | | பொன்னமராவதி பேரூர் | பேருந்து நிலையம், பொன்னமராவதி. | தூத்துக்குடி க.சரத்பாலா சொ.தமிழினியன் |
| 14 | | திருவரங்குளம் தெற்கு ஒன்றியம் | வல்லத்திராக்கோட்டை | மு.பசும்பொன் ரவிச்சந்திரன் சு.சுகநிலவன் |
| 15 | | திருவரங்குளம் கிழக்கு ஒன்றியம் | அணவயல் | போடி ப.காமராஜ் சு.சுகநிலவன் |
| 16 | | கீரமங்கலம் பேரூர் | பேருந்து நிலையம், கீரமங்கலம் | போடி ப.காமராஜ் சு.சுகநிலவன் |
| 17 | 28.06.2025 | அறந்தாங்கி தெற்கு ஒன்றியம் | அத்தாணி | தூத்துக்குடி க.சரத்பாலா சொ.தமிழினியன் |
| 18 | | அறந்தாங்கி நகரம் | பேருந்து நிலையம் அருகில், அறந்தாங்கி | தூத்துக்குடி க.சரத்பாலா சொ.தமிழினியன் |
| 19 | | மணமேல்குடி தெற்கு ஒன்றியம் | கோட்டைப்பட்டினம் | போடி ப.காமராஜ் அ.தீன்ஷாநூப் |
| 20 | | பொன்னமராவதி வடக்கு ஒன்றியம் | அரசமலை விளக்கு | மு.பசும்பொன் ரவிச்சந்திரன் நா.நவீன் |
| 21 | | அரிமளம் பேரூர் | எட்டாம் மண்டகப்படி | மு.பசும்பொன் ரவிச்சந்திரன் சு.சுகநிலவன் |

புதுக்கோட்டை

நாள் : 18-06-2025

